விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 வைகாசி: 19 துல் ஹஃதா: பிறை: 8 இதழ்: 110
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 2-06-1990

## யாழ். போதனு வைத்தியசாலையின் குறைபாடுகளை நீக்க ஐந்து ஆண்டுத் திட்டம்

[யாழ்ப்பாணம்]
யாழ். போதனுவைத்திய சாலையின் சகல பிரிவுகளிலுமுள்ள குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கான 5 ஆண்டுத்திட்டமொன்று சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது சுகாதார அமைச்சின்

(8-ம் பக்கம் பார்க்க)

## பிறப்பு, இறப்பு அலுவலகத்திற்கு புதிய போட்டோ ஸ்ரற் இயந்திரம்

(யாழ்ப்பாணம்)
யாழ். செயலக பிறப்பு இறப்பு மேலதிகப் பதிவாளர் அலுவலகத்திற்கு ஒரு புதிய போட்டோ ஸ்ரற் பிரதி இயந்திரம் வெகுவிரைவில் கிடைக்கவுள்ளது.
அத்துடன் ஒரு மாத காலத்திற்கு வாடகைக்கு மற்றும்

(8ம் பக்கம் பார்க்க)

# ★ வடக்கு கிழக்கில் உருவாகியுள்ள அரசியல் வெற்றிடத்தை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்!

## 3 மணி நேர பேச்சுவார்த்தையின் போது விடுதலைபுலிகளுக்கு ஜனதிபதி வாக்குறுதி

(லண்டன்)

**சுதந்திரமான தேர்தலில் மக்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் உருவாகியுள்ள அரசியல் வெற்றிடத்தை நிரப்புவதற்கான நடவடிக்கை விரைவில் எடுக்கப்படுமென ஜனதிபதி திரு.ஆர்.பிரேமதாசா நேற்று தமிழீழவிடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் வாக்குறுதி வழங்கியிருப்பதாகக் கூறப்படுகிறதென்று பி. பி. சி. தெரிவித்தது.**

இலங்கையில் நிரந்தர அமைதியும் வளமும் ஏற்படுத்துவதற்கு சகல இன மக்களும் ஒற்றுமையாக வாழவேண்டியது முக்கியமென்பதையும் ஜனதிபதி வலியுறுத்தினர்.

விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்துவிடும் சர்ச்சைக்குரியவிடயம்பற்றி பேச்சுவார்த்தை சம்பந்தமாக இலங்கை அரசாங்கம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லையென்றும் பி. பி. சி. தெரிவித்தது.

பேச்சுவார்த்தையில் ஜனதிபதி பேசுகையில் குறிப்பிட்டதாவது!

வடக்கு-கிழக்கு மாகாண பிரச்சனைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண அரசு உறுதிபூண்டுள்ளது. அங்கு நிலவும் அரசியல் சூன்ய நிலையை நீக்க விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். நேர்மையும் நீதியான தேர்தல்கள் மூலம் மக்கள் தமது பிரதிநிதி

(8-ம் பக்கம் பார்க்க)

## புலிகள்-அரசு பேச்சுக்களில் மகளிர் பிரிவு ஜெயாவும் பங்குபற்றினர்

[கொழும்பு]
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மகளிர் முன்னணித் தலைவி செல்வி ஜெயா அரசுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குமிடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் முதல்தடவையாகக் கலந்துகொண்டார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தனித்துவமான சீருடை அணிந்த வண்ணம் ஜனதிபதி திரு.ஆர்.பிரேமதாசா அமர்ந்திருந்த நீள்சதுர மேசையின் எதிர்ப்புறத்தில், நேருக்குநேர் அமர்ந்திருந்து பேச்சுக்களில் கலந்துகொண்டார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சார்பில் திருமதி பாலசிங்கமும் செல்வி ஜெயாவுமாக இரண்டு பெண்மணிகள்

(8ம் பக்கம் பார்க்க)

## இந்தியப் படை நிபந்தனையுடன் வந்ததுமட்டுமல்லாமல் திரும்பியும் சென்றுவிட்டது

(கொழும்பு)
"இந்தியாவிலிருந்து இலங்கை வந்த இராணுவங்கள் திரும்பிச் சென்றது கிடையாது. மேலும் அவைதிரும்பிப் போவதற்கான நிபந்தனைகள் இருந்திருக்கவில்லை இந்திய அமைதி காக்கும் படை நிபந்தனையுடன் வந்ததுமல்லாமல் திரும்பியும் சென்றுள்ளது".

இவ்வாறு முன்னைநாள் ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனு கொழும்பு சட்டக் கல்லூரிமண்டபத்தில் "இலங்கையின் ஐக்கியம், இறைமை

ஜே. ஆர். ஜெயவர்த்தனு

(8-ம் பக்கம் பார்க்க)

## "தனிநாடு கிடைப்பதற்காக உயிர் விடவும் தயார்"

## அமெரிக்க, யப்பான் பத்திரிகைகளுக்கு புலிகள் மகளிர் முன்னணி மாலினி பேட்டி

(யாழ்ப்பாணம்)
"தமிழ் மக்கள் அனைவருக்கும் அடிப்படை உரிமை கிடைக்க வேண்டும். அப்படியான மாற்றம் ஏற்படவேண்டும். அத்தோடு முக்கியமாக ஒரு தனி நாடு அமையவேண்டும். அதற்காக உயிர்விடத் தயாராக இருக்கிறோம்."

இவ்வாறு விடுதலைப்புலிகளின் மகளிர் முன்னணியின் யாழ். மாவட்டஅமைப்பாளர் செல்வி மாலினி, அமெரிக்க, யப்பான் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

மேற்படி பத்திரிகையாளர்களுக்குகோண்டாவில்மாதிரிச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இப்பேட்டி நடைபெற்றது.

அவர் பேட்டியில் மேலும் குறிப்பிட்டதாவது: எம் தமிழ் மக்கள் சிங்களப் பேரினவாத சக்திகளால் பல தொல்லைகளை அனுபவித்தார்கள், தமிழருக்கெதிராகச் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டது. பல இனக்கலவரங்களில் தமிழ்மக்கள் கொலலப்பட்டிருக்கிருர்கள். இந்தப்பாதிப்புக்களிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டுமென்ற உந்தலில் 1984ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தேன்.

(8-ம் பக்கம் பார்க்க)

## சொக்கன் மணி விழா

(யாழ்ப்பாணம்)
முதுபெரும் எழுத்தாளர் சொக்கனின் மணிவிழா. இன்று இலக்கியப் பெருவிழாவாக யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது.

யாழ். நாயன்மார்கட்டு, மகேஸ்வரி வித்தியாசாலையில் 'சொக்கன்' மணிவிழாச் சபைத்தலைவர் திரு. தி. கமலநாதன் தலைமையில் நடைபெறும் மணிவிழாவில் சொக்கன் ஆக்கங்களின் கண்காட்சி காலையில் இடம் பெறும்.

பகல் 2-45 க்கு தொடங்கும் மாலை நிகழ்ச்சிகளில் பல்வேறு பிரமுகர்களின் வாழ்த்துரைகளும், பொன்னுடை போர்த்தலும், மணிவிழா மலர், நாடக நூல் வெளியீடும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தினர் வழங்கும் 'சொக்கன்' மணி விழா சிறப்பிதழ் உள்ளே.

## தியாகி சிவகுமாரன் நினைவாலய நிதி கொடித்தின வாரம்

[யாழ்ப்பாணம்]
உரும்பிராய் சந்தியில் அமைக்கப்பட்டுவரும் தியாதி சிவகுமாரன் நினைவாலயமும், சிலை அமைப்புக்குமான நிதிக்காக நேற்று முதலாம் திகதி முதல்ஒருவாரத்திற்குகொடித் தின வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்களின் ஆதரவுடன் நினைவாலய

(8-ம் பக்கம் பார்க்க)

## பரந்தன் இரசாயன ஆலை: இயந்திரங்களின் திருத்த வேலைகள் நடைபெறுகின்றன

(கிளிநொச்சி)
பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன இயந்திரங்களின் திருத்த வேலைகள் கொழும்பிலுள்ள நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த பொறியியலாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன வேலைப்பகுதிமுகாமையாளர் திரு. தியாகராசா இத்தகவலைத் தெரிவித்தார்.

ஏற்கனவே பல்வேறுதிருத்த வேலைகளை கூட்டுத்தாபன ஊழியர்கள் நிறைவு செய்துள்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்டத்தில் மீண்டும் போஷாக்கு கல்வி

(யாழ்ப்பாணம்)
போஷாக்குத் தொடர்பான கல்வி மீண்டும் யாழ். மாவட்டத்தில் அமுல் நடத்தப்படவுள்ளது, இந்த வருடத்தில் பன்முகப்படுத்தப்பட்ட நிதி உதவியுடன் இது மேற்கொள்ளப்படும்.

இந்தத் திட்டத்தின்கீழ் வளர்ந்தோர் போஷாக்குக் கல்வி, கர்ப்பிணித் தாய்மார்

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் இருபாலை வீதியில் 15 அடி பாதையுடன் 6½பரப்பு விவசாயம் செய்ய / வீடுகட்ட உகந்த நல்ல காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 58/1 கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-3925)

### தவறிவிட்டது

நவாலி வடக்கைச் சேர்ந்த வடிவாம்பிகை செல்லத்துரை என்பவருடைய அடையாள அட்டையும் மணிபேர்சும் (சிறிதளவு பணமும்) 26-5-90 சனிக்கிழமை நவாலியிலிருந்து மண்டைதீவுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் அல்லது மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். (சி-3920)

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு 5)

கடந்த வருடம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தந்த எமது நிறுவனத்தால் நடாத்தப்படும் புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை (ஆறுவது) 07-06-90 வியாழக்கிழமை மு.ப 8-00 / 10-30, பி. ப. 1-00 / 3-30 மணி நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். எமது நிலையத்தால் வெளியிடப்பட்ட மாதிரி வினாவிடை (8 பயிற்சிகள்) விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 25-00. புதிய கல்வி நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரியடி, யாழ்ப்பாணம். (சி.3929)



## சனசமூக நிலையங்களில் சினிமா படக் காட்சிகளுக்கும் சினிமா சஞ்சிகைகளுக்கும் தடை!

(வட்டுக்கோட்டை)

"கிராமங்களில் உள்ள மக்கள் ஒவ்வொருவரதும் உடல், உள வளர்ச்சிக்கு மிக முக்கிய நிறுவனங்களாகச் சனசமூக நிலையங்கள் அமைந்துள்ளன. கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்டுள்ள சனசமூகநிலையங்கள், தத்தமது கிராமங்களிலுள்ள இளஞ் சந்ததியினரை எதிர்கால நற்பிரஜைகளாக, வீரம் மிக்கவர்களாக, அறிவாளிகளாக உருவாக்குவதில் அயராது பணியாற்ற முன்வர வேண்டும். சனசமூக நிலையங்களில் சினிமாப் படங்கள் காட்டுவதையும், சினிமாச் சஞ்சிகைகள் வாசிப்பதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்."

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வட்டுக்கோட்டைப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. ஐயர், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வட்டுக்கோட்டைப் பிரதேசக் காரியாலயத்தில் நடைபெற்ற சனசமூக நிலையங்களுக்கும் விளையாட்டுக் கழகங்களுக்குமான பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு கூறினார்.

வட்டுக்கோட்டைப் பிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்களினதும், விளையாட்டுக் கழகங்களினதும் தலைவர்கள், செயலாளர்கள் சுமார் 75 பேர் வரை இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பிரதேசப் பொறுப்பாளர் திரு. ஐயர் மேலும் கூறியதாவது:

"எமது இளஞ் சந்ததியினரை வழிநடத்தும், நல்ல ஒழுக்கம் உள்ளவர்களாக வாழ வைக்கும் நற்பிரசைகளாக உருவாக்கும் பெரும்பொறுப்பு சனசமூக நிலையங்களுக்கு உண்டு. சினிமாச்சஞ்சிகைகள் இன்றிலிருந்து தடைசெய்யப்படுகிறது. எந்தவொரு சனசமூக நிலையத்திலும் ஆபாசப் படங்கள் காட்டுவதும், சினிமாப் புத்தகங்கள் போடுவதும் நிறுத்தப்படவேண்டும் என்பதை அனைவரும் அறிந்து கொள்ளவேண்டும்.

"எமது பிரதேசத்தில் சில சனசமூக நிலையங்கள் இயங்காது, ஆடுமாடு வளர்க்கப்படும் நிலையங்களாகக் காணப்படுகின்றன. பெயருக்காகச் சனசமூக நிலையங்களை வைத்திருக்கக்கூடாது. சரியான முறையில் பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் இயங்கவேண்டும். இன்றேல் அவை மூடப்படவேண்டும்.

"போராட்டக் காலத்தில் எமக்கு எந்தெந்த வகையில் உதவமுடியுமோ அந்த வகையில் சகலரும் உதவி புரிய வேண்டும். இதற்கு வழிகாட்டிகளாக சனசமூக நிலையங்கள் பணியாற்றவேண்டும்.

"சனசமூக நிலையங்கள் இல்லாத பின்தங்கிய கிராமங்களில் சனசமூக நிலையங்களை உருவாக்க நாம் உதவி புரியக் காத்திருக்கிறோம். சனசமூக நிலையங்களைப் புதிதாக உருவாக்க விரும்புபவர்கள் எம்முடன் தொடர்புகொள்ள வேண்டும்.

"தற்பொழுது 15 வயதிற்குட்பட்டவர்களே எமது இயக்கத்தில் சேர்ந்து பயிற்சிபெற்று வருகின்றனர். மற்றவர்கள் வீதிகளில் திரிகின்றனர். இவர்கள் சனசமூக நிலையங்களுக்குச் சென்று பத்திரிகை வாசிப்பதில்லை. பொன்னான காலத்தை மண்ணுக்காது ஏதோ ஒருவகையில் பயனுள்ளவர்களாகத் திகழவேண்டும்.

"போராளிகளின் நினைவு தினங்களை சனசமூக நிலையங்களே கொண்டாடவேண்டும். வீர மரணமடையும் போராளிகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும்" என்றார். (139)

### ப. நோ. கூ. சங்கத்தில் போட்டோ பிரதி றேனியோ சேவை

(பருத்தித்துறை)

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் போட்டோ பிரதிச்சேவைகள், தட்டச்சு சேவைகள், றேனியோ சேவைகளை ஆரம்பித்துள்ளதாக புலோலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபைத் தலைவர் பொ. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

இச் சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்கென ப. நோ. கூ. சங்கம் போட்டோ பிரதி இயந்திரமொன்றையும் கொள்வனவு செய்துள்ளது. தட்டச்சு சேவைகளை மேற்கொள்வதற்கென தட்டெழுத்தாளர் ஒருவரையும் நியமித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (52)

### சேவைகால பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குக் கற்பிக்கும் தமிழ் கணித ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 7-ம் திகதி வியாழக்கிழமை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் சேவைக் காலப்பயிற்சி வகுப்பு காலை 8-30 தொடக்கம் மாலை 3-30 மணி வரை நடைபெறும்.

இதற்கான ஏற்பாட்டினை மருதனாமடம் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. க. குலசேகரன் மேற்கொண்டுள்ளார்.

### சிரமதான மூலம் வீதி சீரமைப்பு

(தென்மராட்சி)

மந்துவில் சூரிய குமரன் சனசமூக நிலைய உறுப்பினரும் பொதுமக்களும் விநாயகா வீதியை சிரமதானப்பணியாக நிறைவேற்றினர்.

அரச ஒதுக்கீடு ஐம்பதினாயிரம் ரூபாவினை உதவியுடன் 1200 அடி நீளம் வீதி புனரமைக்கப்பட்டது, (81)

## வீதி விபத்து ஐந்து பேர் காயம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் தினமும் தவறாது நடைபெற்று வரும் வீதி விபத்துக்களில் நேற்றுமுன்தினம் 5 பேர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பருத்தித்துறை மருதடியைச் சேர்ந்த சபாரட்ணம் ஸ்ரீதரன் (வயது 35) என்பவர் படுகாயமடைந்தார்.

கோண்டாவில் பஸ்டிப்போ முன்பாக இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-லொறி விபத்தொன்றில் கொக்குவிலைச் சேர்ந்த சண்முகராசா மோகனராசா (வயது 27) என்பவர் படுகாயமடைந்தார்.

அரியாலை மாம்பழச் சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் அரியாலையைச்சேர்ந்த பரஞ்சோதி சசிதரன் (வயது 31) என்பவர் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் வேம்படிவீதியில் இடம்பெற்ற விபத்தொன்றில் வேம்படியைச்சேர்ந்த சி. துஷ்யந்தி (வயது 11) என்ற சிறுமி படுகாயமடைந்தார்.

இருபாலை கோண்டாவில் வீதியில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் கொக்குவிலைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தயாபரன் (வயது 24) என்பவர் படுகாயமடைந்தார். (56)



### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க



### வர்த்தகர் சங்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட வர்த்தகர் சங்கத்தின் கூட்டம் திருநெல்வேலி இந்து இளைஞர் சங்கமண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. கூட்டத்தில் புலிகளின் மக்கள் முன்னணியின் நல்லூர் பிரதேச பொறுப்பாளர் திரு. எஸ். ரங்கன் பிரசன்னமாகியிருந்தார்

புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. தலைவர் ஏ. எம். இராசகோபால் உபதலைவர்கள் என். கே. குலசிங்கம், கே. நடராசா, செயலாளர் எஸ். சிவபாதம் உபசெயலாளர் ஏ. பொன்னுத்துரை, பொருளாளர் கே. தியாகராசா உபபொருளாளர் ஆர். சண்முகம் பதினொரு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (152)

### சனசமூகநிலைய திறப்புவிழா

[மானிப்பாய்]

ஆனைக்கோட்டை 3-ம் கட்டையில் நிறுவப்பட்டுள்ள 'உதயதாரகை' சனசமூக நிலையத்தின் திறப்புவிழா இன்று 2-ம்திகதி நடைபெறுகிறது.

இவ் வைபவத்தையொட்டி ஆண்கள், பெண்களுக்கான சைக்கிளோட்டப்போட்டிகளும் பேச்சுப் போட்டிகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. [71]

### சைவசமய பரீட்சை முடிவுகள்

(நாவற்குழி)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை 1989ல் நடத்திய இலங்கை சைவசமய பாடப் பரீட்சை முடிவுகள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. (107)



## கொழும்பில் "ஈழநாடு"

பிரதம விற்பனையாளர்

எஸ். கே. ரேட் சென்ரர்,

[S. K. TRADE CENTRE]

210, பழைய சோனக தெரு,

கொழும்பு-12.

தொலைபேசி:- 23580



## வலி வடக்கில் இறைச்சி விற்பனை நிலையங்கள் பரிசோதனை

[காங்கேசன்துறை]

வலி. வடக்கில் இறைச்சி விற்பனை நிலையங்களை கண்காணித்து பரிசோதனை செய்யப்பட்ட இறைச்சியை மக்களுக்குக் கிடைக்கச்செய்ய சுகாதார அதிகாரிகள் நடவடிக்கைமேற்கொண்டுள்ளனர்.

வலி. வடக்கில்தொடர்ந்தும் பரிசோதனை செய்யப்படாத இறைச்சி பல இடங்களில் வைத்து விற்பனை செய்யப்படுவது குறித்து பொதுமக்கள் புகார் செய்திருந்தனர்.

இதையடுத்து இப்பகுதியில் உள்ள இறைச்சிக்கடைகள்மீது கண்காணிப்பு மேற்கொண்ட சுகாதார அதிகாரிகள் இறைச்சிக்கடைகள் அமைந்துள்ள விதம்குறித்து ஆராய்ந்து அனுமதிப்பத்திரங்களை வழங்கி இறைச்சிகளையும் பரிசோதனை செய்து விற்பனைக்குவிடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்மூலம் பொதுமக்களுக்கு தரமான சுகாதாரத்திற்கு பங்கம் விளைவிக்காத இறைச்சி கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. [86]



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு 1990-06-30ம் தேதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

தாவரவியலில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் I/ சிரேட்ட விரிவுரையாளர் தரம் II.

சிரேட்ட உதவி நூலகர்/ உதவி நூலகர் தரம் I/ உதவி நூலகர் தரம் II.

**சம்பள அளவுத்திட்டம்**

சிரேட்ட விரிவுரையாளர் தரம் I/ சிரேட்ட உதவி நூலகர். ரூபா 9,600-8x250-11,600/- (மாதமொன்றுக்கு)

சிரேட்ட விரிவுரையாளர் தரம் II/ உதவி நூலகர் தரம் I. ரூபா 8,000-5x250-9,250/- (மாதமொன்றுக்கு

உதவி நூலகர் தரம் II ரூபா3,900 மாதமொன்றுக்கு (நிலையானது) ஒரு வருடத்திற்கு

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களும் விபரங்களும் இப்பல்கலைக் கழகத்தின் சிரேட்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மேற்குறித்த பதவிகளுக்குரிய விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற 23x10 ச. மீ. அளவுடைய தபாலுறை அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளில் உள்ள விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

குறிப்பு :

ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

* உதவி நூலகர் தரம் II நியமனத்தின் போது பௌதீக விஞ்ஞானத்தில் (கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல்) 1ம் வகுப்பு, 2ம்வகுப்பு (மேல் தரம்) த்துடன் புள்ளி விபரவியல், கணனி நிகழ்ச்சிமுறையில் அறிவுள்ளவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990-05-31.

(ஏ -782)

## மொஸாம்பிக்கில்

# இவ்வாண்டில் லட்சக்கணக்கானோர் பட்டினியால் இறக்கும் அபாயம்!

(லண்டன்)

**மொஸாம்பிக் நாட்டில் உணவுப் பொருள்களின் தொகை அதிகரிக்கப்படாவிட்டால் இந்த ஆண்டு லட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் இறக்கவேண்டி வரும் என்று மொசாம்பிக்கிலுள்ள நிவாரண ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.**

இந்நாட்டில் நடந்துகொண்டிருக்கும் நீண்டகால உள்நாட்டுப்போரின் விளைவாக இருபது லட்சம் மக்கள் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நெருக்கடிநிலை காரணமாக உணவும், குடியிருப்பு வசதிகளும் தேடி பல்லாயிரக் கணக்கான மக்கள் நாள்தோறும் இடம்பெயர்ந்த வண்ணமுள்ளனர்.

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இருக்கும் அகதிமுகாம்களுக்கு மக்கள் தினமும் வந்து குவிந்துகொண்டிருப்பதாக கூறப்படுகிறது.

பல அகதிமுகாம்களில் குழந்தைகள் சத்துணவுப் பற்றுக்குறையால் அவதிப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (து)

## குடிநீர் விநியோகம்

(புங்குடுதீவு)

தீவுப்பகுதியில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் அப்பகுதி மக்களுக்குக் குடிநீர் விநியோகமொன்றை வேலணை பல நோ. கூ. சங்கம் மேற்கொண்டு வருகின்றது.

வேலணை சாட்டிப் பகுதியிலிருநது குடிநீரைக் கொண்டு வந்து ஒரு கலன் நாற்பது சதமாக விற்பனைசெய்து வருகின்றது. (101)

### கின்னஸ்சாதனை:

## எழுத பத்து நிமிடம் எடுக்கும் டாக்டர் ஒருவரின் நீளப்பெயர்

(புதுடில்லி)

இந்தியாவிலுள்ள டாக்டர் ஒருவரின் பெயரை எழுதுவதற்கு பத்து நிமிடநேரம் தேவைப்படுவதுடன் உச்சரிப்பதற்கும் நாலு நிமிடம் செல்கிறது.

அவரது பெயரைச் சுருக்கமாகச் சொல்வதற்கு 68 எழுத்துக்கள் தேவைப்படுகிறது. முழுப்பெயரைச் சொல்வதற்கு இதைப்போல பத்து மடங்கு வார்த்தைகள் அதாவது 680 வார்த்தைகளைக் கொண்டிருக்குமென்றால் ஆச்சரியம்தான்.

உலகிலே இவ்வாறு நீளமான பெயரை வைத்துள்ளமைக்காக இவரது பெயரை கின்னஸ் அதிகாரிகள் 1991-ம் ஆண்டு கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்யவுள்ளார்கள்.

இவருடைய பாஸ்ப்போர்ட் திருமணப்பதிவுப் பத்திரம் உட்பட முக்கியமான பதிவுகளில் சுருக்கமான பெயரே பயன் படுத்தப்படுகிறது.

இவரையும் சேர்த்து 16 இந்தியர்கள் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (து)

# துருக்கியில் பூமி அதிர்ச்சி 300 பேர் பலி; பலர் காயம்!

## பல வீடுகள் சேதம்

(இஸ்தான்புல்)

துருக்கியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பலத்த பூமியதிர்ச்சியினால் 300 பேர் இறந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

இப் பூமியதிர்ச்சியின் காரணமாக பல மாடிக் கட்டிடங்கள் இடிந்துவீழ்ந்துள்ளதுடன் பல வீடுகள் அழிந்துள்ளன.

காயமடைந்தவர்களில்பலர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரியவருகிறது.

வாசிகசாலைக்கட்டிடமொன்றில் ஒதுங்கியிருந்த பலர் அங்கிருந்த புத்தக றாக்கைகள் சரிந்து விழுந்தமையினாலும் பலத்த காயமடைந்துள்ளனர். (து)

### தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில்

# நோயாளர் பாதிப்பு

[காங்கேசன்துறை]

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் நெரிசல் காரணமாகப் பெரிதும் கஷ்டமுறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வைத்தியசாலைக்கு வரும் நோயாளர் தொகை அதிகரித்து வருவதற்கேற்ப வைத்திய அதிகாரிகள் கடமையில் இல்லாமல் இருப்பதால் நோயாளர்கள் காத்து நின்றும் நெரிசல்பட்டு பெரிதும் கஷ்டமுறுவதாகவும், சில நோயாளர்கள் மயங்கி விழும் நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநோயாளர்கள்பிரிவில் சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் இந்த அவலநிலை குறித்து வைத்திசாலை வட்டாரங்களில் விசாரித்தபோது வைத்திய அதிகாரிகள் பற்றுக்குறையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

போதிய வைத்திய அதிகாரிகளை நியமித்து நோயாளர் படும் கஷ்டத்தைப் போக்குமாறு சுகாதாரப் பகுதியினரை நோயாளர்கள் கோருகிறார்கள். (86)

## 2000 தொன் வெங்காயம் இறக்குமதி

[கொழும்பு]

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள 2000 மெற்றிக்தொன் பெரியவெங்காயத்தை கூட்டுறவுமொத்த விற்பனை நிலையம் விநியோகித்துள்ளது.

ஒருகிலோ பெரிய வெங்காயம் 17 ரூபா 50 சதமாக சில்லறை விலைக்கு விற்பனை செய்யப்படும்.

மற்றுமொரு பத்தாயிரம் மெற்றிக்தொன் பெரிய வெங்காயம் அடுத்தவாரம்இலங்கை வந்து சேரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஸ்ரீநகரில் மொகமதுபரூக் அஞ்சலிக்கூட்டம்

## சுதந்திரம் கோரி மக்கள் கோஷம்!

(ஸ்ரீநகர்)

ஜம்முகாஷ்மீர் மாநிலத்தின் தலைநகர் ஸ்ரீநகரில் பத்து நாட்களுக்குமுன் சுட்டுக் கொல்லப்பட்ட மதத்தலைவர் மௌலவிமொகமதுபரூக்அவர்களின் நினைவு அஞ்சலிக்கூட்டத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்

இக்கூட்டத்தில் மௌலவி பரூக் அவர்களின் மகன் உரை நிகழ்த்த தொடங்கிய பொழுது முகமூடி அணிந்த தீவிரவாதிகள் இறந்தவரின் கல்லறைக்கு மேலேயிருந்து வானை நோக்கிச் சுட்டனர்.

இருதடவை ஒத்திவைக்கப்பட்ட இந்த அஞ்சலிக்கூட்டம் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டபோது நடத்தப்பட்டது.

இந்த அஞ்சலிக்கூட்டத்தின் இறுதியில் கூடியிருந்த மக்கள் எங்களுக்குச் சுதந்திரம்வேண்டுமென்று கோசம் எழுப்பினார்கள்.

மொகமது பரூக்கின் மகன உரையாற்றுகையில் தனது தந்தையின் லட்சியமாகிய சுதந்திரப் போராட்டத்தைத் தான் பூர்த்தி செய்யப்போவதாக வாக்குறுதியளித்தார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய தீவிரவாதிகள் மக்களை ஐ. நா. மன்றத்தின் இராணுவப் பார்வையாளர் குழு அலுவலகத்திற்கு ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தும்படி வேண்டினார்கள்.

மக்கள் எல்லோரும் ஐ. நா. மன்ற அலுவலகத்திற்கு ஊர்வலமாகச் சென்ற பொழுது அந்த அலுவலகத்திற்கு அரைமைல் தொலைவில் பாதுகாப்பு படையினரால் தடுத்துநிறுத்தப்பட்டனர்.

ஐ. நா. மன்ற அலுவலகத்திற்கு புகார் மனு ஒன்றைக் கொடுக்க அனுமதிக்கப்படும் வரை தாம் குறிப்பிட்ட இடத்தைவிட்டு அசையமாட்டோம் என்று கூறிய மக்கள் வீதிகளில் உட்கார்ந்துகொண்டனர்.

பொலிஸ் அதிகாரி ஒருவர் ஐ. நா. மன்ற அதிகாரி ஒருவரைஅழைத்துவந்துமக்களின் புகார் அவரிடம் கையளிக்கப்பட்டது. (து)

## யோக சுவாமிகள் ஜயந்தி தினம்

(காங்கேசன்துறை)

யோக சுவாமிகளின் 118வது ஜயந்தி தினம் கீரிமலையில் அமைந்துள்ள யோகர் சுவாமிகள் மகளிர் தவ நிலையத்தில் கொண்டாடப்பட்டது.

முன்னாள் அதிபர் திரு: ய. நல்லையா தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் சோதிட விஞ்ஞான நூலாசிரியர் திரு. த. சத்தியதாசன் யோக சுவாமிகளின் பெருமைகள் பற்றி உரையாற்றினார்.

பூஜை ஆராதனைகளும், பஜனை நிகழ்ச்சியும் இடம் பெற்றன. (86)

### ★ சிந்து மாகாணத்தில்

# சட்டம், ஒழுங்கு நிலைநாட்டுவதற்கு பிரதமர் பெனஸிர் பூட்டோ உறுதி!

(இஸ்லாமாபாத்)

சிந்து மாகாணத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட தான் உறுதி பூண்டுள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் பெனஸிர் பூட்டோ தெரிவித்துள்ளார்,

கலவரம் இடம்பெற்ற ஹைதராபாத் நகரத்திற்கு விஜயம் செய்த பின்னர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலே அவர் இவ்வாறு கூறினார். சிந்து மாகாணத்திம் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தற்பொழுது அங்கு அமைதி நிலவுகிறது. என்றாலும் இந்த வன்முறைகள் ஏற்பட்டதற்கான காரணங்களை கண்டறிய ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

## கராச்சியில் நீர்விநியோகம் சீர்குலைவு; 40 பேர் பலி!

### நீர் விநியோகம் சீர்குலைவு

இதேவேளை கராச்சி நகரில் சதிகாரர்களால் நீர் விநியோகம் சீர்குலைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக நகரத்தில் ஒரு பகுதியினருக்கு நீர் விநியோகம் தடைப்பட்டிருப்பதடன் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு நீர் விநியோகம் நடைபெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்நகரில் பலத்த பதற்றம் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது,

### கராச்சியில் 40 பேர் பலி

இது இவ்வாறிருக்க கராச்சி நகரில் தொடர்ந்து இடம் பெற்றுவரும் வன்முறையால் நேற்று முன்தினம் 40 பேர் வரையில் கொல்லப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(7-ம் பக்கம் பார்க்க)

**மணிவாக்கு**

''ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்தலே வாழ்வின் நியதி. அதனுல் ஒருவர் வாழலாம், பலரை வாழவைக்கலாம்''

— மகாத்மாகாந்தி.

# நமது நோக்கு

## கூட்டுறவு இயக்கம் - சீர்திருத்தம் வேண்டும்!

கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்குப் பல நன்மைகளைத் தரத்தான் அமைக்கப்பட்டன என்பதில் இரு கருத்தில்லை.

இரண்டாவது மகாயுத்தத்தின்போது எமது நாட்டிலே பிரபல்யமான கூட்டுறவு இயக்கம் வடபகுதியில் தான் தொடர்ந்து வளர்ச்சி பெற்றுப் புகழ்பெற்றது என்பதை எவரும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

இன்றைய நிலை என்ன? இலாப நோக்கோடு தனியார் ஏற்படுத்தும் போட்டியைக் கூட்டுறவு இயக்கம் சமாளிக்கமுடியாது திண்டாடுகிறது.

அங்கத்தவர்கள் தமது நுகர்ச்சிக்கான பொருட்களை வேறிடங்களிலும் வாங்குவதை நாம் காண்பதில்லையா?

தட்டுப்பாடுகள் ஏற்படும் காலங்களில் மாத்திரம் தான், அரசாங்கம் விநியோகிக்கும் பொருட்களை வாங்குவதற்கு முண்டியடித்துக்கொண்டு சென்று, 'சட்டம் பேசும்' உறுப்பினர்கள் மலிந்துவிட்டார்கள்.

ஜனசவிய, உணவு முத்திரை போன்றவற்றிற்கான நிவாரணம் வழங்கும் அமைப்புகளாகத்தான் கூட்டுறவுச் சங்கங்கள் மாறிவிட்டனவோ என்ற ஐயப்பாடு தோன்றிவிட்டது.

குறிப்பிட்ட தொகைப் பணத்திற்கான கொள்வனவை அங்கத்தவர்கள் வாங்கவேண்டுமென அழுத்தம் கொடுக்க முடியாதா?

விலை குறைக்கும்போது உடன் குறைக்காது, விலையேற்றம் என வானொலிச் செய்தி கேட்டவுடனேயே விலையைக் கூட்டிவிடுகிறார்களே என்ற குற்றச் சாட்டுகள் வருகின்றன.

கூட்டுறவு இயக்கத்திற்குள் பல தலையீடுகள் நிர்வாகச் சீரின்மையினால், ஊழல்கள், நட்டங்கள் பற்றிய செய்திகள் சர்வசாதாரணமாகிவிட்டன.

இத் துறையைப் புனரமைப்பதுபற்றி அண்மையில் நாடாளுமன்றத்திற்கூட விவாதம் நடைபெற்றிருக்கின்றது.

சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டுறவு விதிகளை இங்கும் சட்டமாக்கி அமுல்படுத்த வேண்டிய நிலை உருவாகிவிட்டது.

அரசியல் தலையீடின்றிக் கூட்டுறவு இயக்கத்தை வளர்க்கவேண்டுமென்று பலர் அங்கு கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

சட்டவிதிகள் இருப்பது கூட்டுறவு இயக்கத்தைத் தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்புக்குள்ளாக்காது தவிர்க்க உதவும்.

எனவே சட்ட விதிகளுக்கு விளக்கம் கொடுக்கும் கூட்டுறவு ஆணையாளரும் அவரது பிரதிநிதிகளும் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு நின்று செயற்படவேண்டும்.

அவர்களது வேண்டாத தலையீடுகளும், சிலவகை 'அழுத்தங்களும்' தவிர்க்கப்பட விதிகளும் இருத்தல் அவசியம்.

### அணிவிழவே நாயன்மார்கட்டில் இன்று

மணிவிழவு சொக்கனுக்கு மட்டும் இல்லை.
மரபுக்கும் தமிழுக்கும் மக்கள் செய்யும்
அணிவிழவே நாயன்மார் கட்டில் இன்று! ஆம்,
ஆல்போலத் தழைத்தோங்கும் 'சொக்கன் மாஸ்ரர்'
பிணிஅகல, மிடிஅகலப் பின்னும் பின்னும்
பெருநூல்கள் பலபன்னி, எழுபத்தைந்தில்
துணையுடனே பவளவிழாக் காண்க என்று என்
துணிவுமிகும் பேனையினல் எழுதிவைத்தேன்.

--சத்தியசீலன்

### மேதகு சொக்கன் வாழி!

நாளும் தமிழ் வளர்த்த நால்வர் தமைத் தொழுது
வாழும் தமிழ்ப் புலவ! மாண் நாயன் மார்கட்டில்
சூழும் தமிழ் அமுதச் சுவையின் நல்லூற்றாகி
மேலும் தமிழ் சுரக்கும் மேதகு சொக்கன் வாழி.

--சிற்பி

### மணிவிழா காணும் சொக்கர்!

மணிவிழாக் காணும் மாண்பினர் சொக்கர்
அணிநமக் கெண்பதில் ஐயமே இல்லை
பல்லாண்டு வாழ்ந்து பணிபல வாற்றி
எல்லோரும் இன்பம் எய்திட வாழ்த்துவோம்.

--ஆர்.எஸ். நடராசா

# மணிவிழா நாயகன் சொக்கனின் ஆளுமை

எழில் நகராகிய யாழ் நகரின் நல்லூர்க் கோவிலுக்குக் கிழக்கே நாயன்மார்கட்டு வைத்தியசாலைக்குச் சிறு தொலைவில் நவீன அகத்தியர் வாழ்ந்துகொண்டிருக்கிறார். அவர்தான் மணிவிழா நாயகனும் தமிழறிஞருமான வித்துவான் க.சொக்கலிங்கம் M.A.

'நல்லாரைக் காண்பதுவும் நல்லார் சொற்கேட்பதுவும், நல்லாரோடு இணங்கியிருப்பதுவும் நன்று' என்பது ஆன்றோர் மொழி. இதற்கிணங்க சொக்கன் ஐயாவின் 'வாணி' இல்லத்திலுள்ள ஓலைக்குடிலில் அன்றைய குரு-சீட முறையில் இன்றைய நவீன முறைக் கலைமாணி வெளிவாரிப்பரீட்சைக்குத் தமிழ் இலக்கணம், இலக்கியம் கற்றுத்தேறிய மாணவர் பலருள் யானும் ஒருவன்.

சொக்கனின் ஆளுமை ஆறு தசாப்தங்கள் தமிழ்கூறும் நல்லுலகத்தில் சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டு இருக்கின்றது.

சொக்கன்ஐயா அறிவின் நிறைகுடம். யாழ். ஸ்ரான்லிக் கல்லூரியின் பொற்காலம் என வர்ணிக்கப்படும் வேளை அங்கு கல்விகற்று ஆங்கில சிரேஷ்ட தராதரப்பத்திரப் பரீட்சையில்சிறப்பாக தேர்ச்சியுற்று சைவத்திலும் தமிழிலும் கொண்ட காதலினல் தமிழ் பயிற்றப்பட்ட ஆசிரியனக வெளியேறி கல்வித் தொண்டிற்கே தம்மை பூரணமாக அர்ப்பணித்து சேவையிலிருந்துகொண்டே கலைமாணி, தமிழ்கல்வி டிப்புளோமா, முதுகலைமாணி ஆகிய பட்டங்களை ஈட்டியுள்ளார்.

பலாலி ஆசிரிய கல்லூரி கல்விமான் கலாநிதி சிவப்பிரகாசம் அவர்கள் கற்பித்தல் முறையைப்பற்றி கூறும்வேளை ஓடும் ஆற்றில் திருமுழுக்குப் பெற வேண்டும் என்றார். இதில் இரு கருத்துக்கள் ஆழமாகச் சிந்திக்கத் தக்கவை. ஒன்று ஓடும் ஆறுக இருப்பின் அம்மேதையைப்நீர் தூய்மையாக இருக்கும்.

**துரை ஆரோக்கியதாசன்**
(பலாலி ஆசிரியர் கல்லூரி விரிவுரையாளர்)

பற்றி ஆறுவரிகளில் எழுதி முடிப்பதென்றால் முடியாத காரியம். அப்பெரியாரின் ஆளுமையைப் பலர் பலகோணங்களில் அணுகுவார்கள். இருப்பினும் என் உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்கும் அன்பினல் உந்தப்பட்டுக் கடுகளவாவது அவரைப்பற்றிக் கூறவிழைகிறேன்.

சொக்கன் ஐயா எல்லோருக்கும் நல்லவர். களங்கமில்லாத அன்புள்ளவர். எப்போதும் முகம் மலர்ந்து இன்சொல் பேசும் பண்பாளர்.

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்' என்ற வள்ளுவன் கூற்றுக்கு இலக்கணமாக வாழ்ந்துவருகிறார். சைவமும் தமிழும் வளரக் கடினமாக உழைக்கும் பெருமகன் அதேவேளை கிறீஸ்தவம்,இஸ்லாம், பௌத்தம் ஆகிய சமயங்களை மதிக்கும் பண்பாளன். சமய,சமூக, தமிழ்த் தொண்டுகளில் தாமும் களத்தில் இறங்கி, தம்முடன் சேர்ந்தவர்களையும் பணிபுரிய வழிசமைத்துக் கொடுக்கும் நெறியாளன். அதிகாரிகளின் உள்ளம் அறிந்து கடமைபுரிந்த மதியூகச் சேவையாளர். இறையன்பால் நிரம்பிய ஞானசீலர். எழுதிக் கொடுக்கும் உரைகளைவிட வாழ்ந்து கொடுக்கும் உரைகளே சிறந்தவை என்பதைத் தாரகமந்திரமாகக் கொண்டவர். பல்நோக்கும் பரிவுள்ளமும் கொண்ட பெரியாரின் ஆளுமையை அளக்க அளவுகோல் இன்றித் தவிக்கிறேன்.

மற்றது உயிருட்டம் உள்ளதாக இருக்கும் அதேபோன்று சொக்கன் ஐயா தாமும் படித்துக்கொண்டு விடாமுயற்சியால் கல்வி ஏணியில் ஏறிக்கொண்டு, அதேவேளை மாணவ சமுதாயத்திற்கு பணிபுரிந்து கொண்டு பலநூல்களைப் படித்துக்கொண்டு கடிகாரம் போன்று இயங்கும் பேராசானைக்காணும் மாணவ பரம்பரை புளகாங்கிதம் கொள்ளாமல் இருக்கமுடியாது.

சொக்கன் ஐயா ஈழத்திருநாட்டிலே அரை நூற்றுண்டு காலம் விடாமல்எழுதும் பழம்பெரும் எழுத்தாளர். இலக்கிய வானில் இவரின் நூல்கள் காலத்திற்குக் காலம் வெளிவந்துகொண்டே இருக்கின்றன. இப்பெரியாரின் படைப்புக்கள் பல.

நவீன அகத்தியர் ஈழத்தின் குறிஞ்சிப் பகுதியில் கற்றன் புனித யோண் பொஸ்கோ கல்லூரியில்ஆசிரியப் பணிபுரிந்துள்ளார். அவ்வேளை 'மனேன்மணியம்' என்றநூல் எட்டாம் வகுப்பு மாணவருக்கு ஏற்ற முறையில் வெளியீடு செய்யும்பொழுது யாழ். நகரில் பிரபல்யமான 'புளொக்' அமைப்பாளரும், கலைஞருமான அமரர் சலமோன் பிரான்சீஸ் துரையப்பா அவர்களிடம் சொக்கன் அவர்கள் நூலின் அட்டைப் படத்திற்கு 'புளொக்' செய்வித்தார். அவ்வேளை நான் சிறுவனுயிருக்கும் பொழுதே கண்ட காட்சி இன்றும் பசுமையாகவுள்ளது. எனது மாமனர் கம்பளை புனித ஜோசப் கல்லூரியின் அதிபராகவிருந்த அருட் சகோதரர் S. A. பிரான்சிஸ் S. S. J., B. A. அடிகள் தமிழ் விழாவிற்குச் சொக்கன் ஐயா அவர்களைச் சிறப்புரையாற்ற அழைத்தார். இவரின் சொல்வன்மையால் பலரின் உள்ளத்தைக் கவர்ந்துள்ளார். சொல்லின் செல்வனகத் திகழுகிறார் என்று அருட்சகோதரர் கூறிய கூற்று இவருக்குச் சாலவும் பொருந்தும். இவர் சிறந்த சைவசமயவாதியாக இருப்பினும் சமயவேறுபாடு இன்றிக் கிறீஸ்தவ அன்பர்களுடன் நெருங்கி உறவாடும் பண்பாளர்.

சொக்கன் ஐயா அவர்கள் சிறந்த எழுத்தாளர் மட்டுமல்லர். நாடக ஆசிரியர், சிறந்த சமயச் சொற்பேருரை ஆற்றும் வல்லமை பொருந்தியவர். தமிழே தம் உயிராகக் கொண்டு பணிபுரியும் பெரியோன். வானொலி, தொலைக்காட்சி, இலக்கிய வட்டங்கள், இலங்கை, இந்தியப் பத்திரிகைகளில், இலக்கிய சஞ்சிகைகளில் கவிகள், கட்டுரைகள், கதைகள், விமர்சனங்கள், உரைகள் மூலம் மெருகூட்டிய

(7-ம் பக்கம் பார்க்க)

### மனக்கோயில் தனில்வாழும் கௌரீஸனே!

ராகம் – கீரவாணி தாளம் -ஆதி

பல்லவி

மனக்கோவில் தன்ல்வாழும் கௌரீஸனே- என்றும்
மனக்கோவில் தனைஆளும் சர்வேஸனே- என்தன்
...(மனக்...)

அனுபல்லவி

ஆசைகள் பலகோடி அலைமோதும் போதும்- பந்த
பாசங்கள் பலகூடி அலைமோதும் போதும்- அந்த
... (மனக்...)

சரணம்

கலைக்கோவில் எழில்போலென் மனக்கோவிலாமோ- உயர்
மலைக்கோவில் நிலைபோலென் மனக்கோவிலாமோ- வாச
மலர்க்கோவில் இதம்போலென் மனக்கோவிலாமோ
-அன்பு
மனக்கோவில் சுகம்போலென் மனக்கோவிலாமோ
-ஆனல்
...(மனக்...)

-'முருகு'

[இன்று திருக்கேதீச்சரத்தில் 6 ம் திருவிழா]

# பலதும் பத்தும்

### கூர்மையானவை 'அவரது' கண்கள்...!

1967 — கிளிநொச்சிக் கல்வி வட்டாரம் - நாடகப் போட்டி–உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இ. நவரத்தினம் தலைமை.

பல பாடசாலை நாடகங்கள்–கடுமையான போட்டி.

நடுவர்கள் தீர்ப்பு வழங்குகிறார்கள்-பூநகரி மகாவித்தியாலயத்தின் ''மாவீரன் சங்கிலி'' முதலிடம் பெறுகின்றது.

நடுவர்கள் சார்பில் முடிவுகளை வெளியிட்டுக் குறிப்புகள் கூறுகிறார் 'அவர்'...! நாடகங்களின் சிறப்புக்களையும் கூறுகிறார்; நாசூக்காகக் குறைகளையும் சுட்டிக் காட்டுகிறார்.

முதலாம் இடம் பெற்ற நாடகத்தையும் விட்டுவைக்கவில்லை ! அதிலே கண்ட குறையையும் சுட்டிக் காட்டியிருந்தார்!

போட்டி கடுமை-ஒவ்வோர் அம்சத்திலும் புள்ளிகள் பெற்றுவிட ஆவல்; துடிப்பு. எனவே சங்கிலியனின் சிம்மாசனத்தைச் சிறப்பாக்கி அரங்கமைப்புக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றுவிடும் நோக்கில்... கோவில் திருவாசியையும் பயன்படுத்தி யிருந்தார்கள். மாலைகளால், வண்ணத் தாள்களால் மூடிமறைத்திருந்தார்கள். எனினும் 'அவரது' கூரிய கண்களிலிருந்து தப்பவில்லை.

''கோயிற் பொருட்களை மேடையிற் பயன்படுத்திப் புனிதம் கெடுக்கக்கூடாது! என்றிருக்கிறார் 'அவர்'.

நாடகத்தை எழுதித்தயாரித்த அன்றைய அதிபர் மு. சிவானந்தம் அக்கருத்தைப் பணிவோடு ஏற்றிருந்தார். பண்போடு கூறிய 'அவர்' யார்?

வேறு யார்...? இன்று மணிவிழாக் காணும் சொக்கன்தான்...!

அவருக்கு வாழ்த்துக்கள்!

வாணி

# மணிவிழா காணும் சொக்கன்

## சொக்கனின் ஆக்கங்கள் பல ரகம்

யாழ். ஆயர் வண. தியோ குப்பிள்ளை வழங்கிய ஆசிச் செய்தி:

''சொக்கன்'' என்னும் புனைபெயரில் தமிழ்மக்களால் நன்கறியப்பெற்றவராகிய வித்துவான் திரு. க. சொக்கலிங்கம் M A. அவர்கள், இறைவன் திருவருளால் பல வகையான ஆற்றல்கள் நிரம்பப் பெற்ற ஒரு மனிதன் ஆவார்.

''பத்திரிகைகளில் அவரது எழுத்தோவியங்கள் அன்றும் இன்றும் பரவலாக வெளிவந்து கொண்டிருப்பதை யாவருமறிவர். சிறுகதை, கவிதை, நாவல், நாடகம், ஆராய்ச்சிக் கட்டுரைகள் முதலியனவாக அவரது ஆக்கங்கள் பல ரகத்திலும் அமைந்திருக்கின்றன.

''தமிழ் மொழியையும், இந்து மதத்தையும் இரு கண்களாகப் போற்றும் சொக்கன் அவர்கள் சிறந்த ஜனரஞ்சகப் பேச்சாளருமாக விளங்குகிறார்.

''இந்த ஆசியுரையை வழங்குவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைவதுடன், திரு. சொக்கலிங்கம் அவர்கள் நீண்டகாலம் சுபகாலத்துடன் சிறப்புற வாழ்ந்து, மேலும் மக்களுக்கு தொண்டுகளாற்ற இறைவன் அருள் பாலிக்கவேண்டுமென ஆசித்து வாழ்த்துகிறேன்.''

## ஆற்றல் இலக்கியத்தில் முத்திரை பதித்தவர்

இலங்கை ஜமா அதே இஸ்லாமி செயலர் எம். எம். சாபீர் வழங்கிய வாழ்த்துரை:

தமிழ்மொழி, இலக்கியம், சமயம், கலாசாரம் என்னும் பல்துறைகளிலும் பல நீண்ட ஆண்டுகளாகப் பயன் கருதாப் பணி பூண்டு உழைத்துவரும் ஆற்றல் மிக்க அன்பர் வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) M, A. அவர்கள் மணிவிழாக் காணும் தகைமை சார்ந்தவர்கள்.


''ஆற்றல் இலக்கியத்தில் அவர் கைபடாத துறையே இல்லை எனலாம். கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, ஆய்வுகள், மாணவருக்கான உதவி நூல்கள், நாடகங்கள் ஆகிய அனைத்துத் துறைகளிலும் தனக்கென ஒரு முத்திரை

(7-ம் பக்கம் பார்க்க)

## 'அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்'

சொக்கன் மணி விழாச் சபைத் தலைவர் திரு. தி. கமலநாதன் எம். ஏ. வழங்கும் மணிவிழாச் செய்தி:

''அறிஞர்களையும் பெரியோர்களையும் மதித்து வாழப் பழகுதல் நல்லதொரு வாழ்க்கை நெறியாகும். பழந்



தமிழர் கண்ட கல்வி மரபும் இத்தகையதே.''

''முற்காலத்திற் குருகுல முறையிற் கல்வி கற்கும்போது மாணவர்கள் குருபக்தியுடன் செயற்பட்டுத் தமது வாழ்க்கையினை அமைத்துக்கொண்டனர். குருபக்தி அவர்களுக்குச் சகல செல்வங்களையும் பெற்றுக் கொடுத்தது.

''பெரியோர் துணை எமக்குக் கிடைக்கும்போது இன்னுசெய்யாமை, இனியவை கூறல், ஊக்கமுடைமை, வாய்மை போன்ற நல்ல பண்புகள் எம்மை வந்தடைகின்றன. இதனாலேதான் வள்ளுவப் பெருந்தகை,

''அரியவற்று ளெல்லாம்
அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்''

என்று கூறுகின்றார்.

''இப்பண்பினை நன்குணர்ந்தவர்கள் நாயன்மார்கட்டு மக்கள். அறிஞர்கள், பெரியோர்களைப் போற்றி அர்ச்சித்து வாழ்ந்து பழகியவர்கள். பெரியவர்களை — நாயன்மார்களை மதித்து, மடம் அமைத்துப் பூசித்தவர்கள் எமது முன்னோர். தமிழ் உலகுக்கும், சைவ உலகுக்கும் சொக்கன் அவர்கள் தமது கவிதைகளாலும், கட்டுரைகளாலும், சிறுகதைகளாலும், நாவல்களாலும் காட்டிய பாதை சிறப்பானது. பழைமைக்குப் பழைமையாய், புதுமைக்குப் புதுமையாய் அவர்வாழ்ந்துகாட்டி எம்மையும் வாழ்விக்கும் முறை போற்றப்படக்கூடியது. சொக்கன் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து, தமிழ்த் தொண்டு புரிய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.''

## வாழ்ந்து காட்டும் ஓர் ஆதர்ச ஆசான்

வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் விடுத்திருக்கும் வாழ்த்துரை:

''விழுமியங்களை எய்துவதற்கு ஒரு சமூகத்தின் உயிர் நாடியாக உழைக்கும் சமூகம் ஆசிரிய சமூகமே. நல்லாசிரியர்களைத் தெய்வமாகப் போற்றுவது எமது இந்து மரபு. உயர் பண்பும் அருளும் கடவுள் நம்பிக்கையும் பெருந்தன்மையும் பலநூல் தேர்ச்சியும் நூற்பொருளை எடுத்துரைக்கும் ஆற்றலும் உலகில் அறிவும் போன்ற உயர்பண்புகளை உடையவனே நல்லாசிரியனாவான்.

''இத்தகைய உயர்குணங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற நல்லாசிரியர்கள் சிலரே இன்று எம்மிடையே காணப்படுகின்றனர். இத்தகு நல்லாசிரியர்களுள் ஒருவராக எம்மிடையே வாழ்ந்து ஆசிரியப் பணிபுரிபவரே ''சொக்கன்'' என்று எல்லோராலும் போற்றி அழைக்கப்படும் திரு. க. சொக்கலிங்கம் அவர்கள். அவரைக் கற்பிக்கும் ஆசான் என்பதை விட வாழ்ந்து காட்டும் ஆதர்ச ஆசான் என்பதே பொருத்தமாகும்.

சொக்கன் அவர்கள் எமது

(7-ம் பக்கம் பார்க்க)

## சொக்கனின் பேச்சு ஒரு தனிப் பாணி

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் வழங்கிய ஆசியுரை:

அறிஞர் திரு. க. சொக்கலிங்கம் அவர்கட்கு ''மணிவிழா'' எடுக்க விருப்பதறிந்து பெருமகிழ்ச்சி. ஒரு தகுதி வாய்ந்த பெரியாரைக் கௌரவிப்பதானால் அவர் வாழ்நாளில் இதைச் செய்யும் போது தான் அவர் மகிழ்ச்சியுறுவார். இதைக்காணும் போது நாமும் உளப்பூரிப்படைவோம். இதுவே முக்கிய நோக்கம். இவர் பட்டப் பாராட்டுக்களை விரும்பாதவர். இதனை, இவர் அணியும் ஆடம்பரமில்லாத உடையும் சொக்கன் என்னும் புனைபெயரும் என்றுபகர்வன. இந்நாட்டில் மட்டுமல்ல தமிழகத்திலும் சொக்கனை அறியாத தமிழ் மக்கள் இலர் எனலாம். அமரர் வாசீக கலாநிதி கி. வா. ஜ. ஐயர் அவர்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றவர். தாம் எழுதுவது போல பேசுவார். நாம் பேசுவது போல் எழுதுவார். இத்திறன் வாய்க்கப்பெற்றோர் மிகச் சிலரே. சைவசமய முன்னேற்றத்திற்கும் நற்றமிழ் வளர்ச்சிக்கும் அவர்கள் எழுதிய நூல்கள், கட்டுரைகள் அளப்பரியன. அவற்றை எல்லாம் சேர்த்து ஒரு நூலகம் அமைத்து விடலாம். இவருடைய சொற்பொழிவுகளைப் பன்முறை கேட்டு மகிழ்ந்தோம். அவர் பேச்சு ஒரு தனிப்பாணி. அதில் தத்துவார்த்தங்கள், அறிவுரைகள் ஆராய்ச்சிகள் ஆகியன நிறைந்திருக்கும். எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் இலகு தமிழாகவுமிருக்கும். இவை வெறும் புகழ்ச்சியல்ல. உண்மை. சொக்கன் அவர்களுக்கு எமது நல்லாசிகளை வழங்குகிறோம்.''


'சொக்கன்' அவர்கள் பல்லாண்டு வாழ்க!

- ரவர் -

324, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

அன்பு வாழ்த்துக்கள்!

மஜீத் ரெக்ஸ்ரைல்ஸ்

64, பெரியகடை, யாழ்ப்பாணம்.

'சொக்கன்' பல்லாண்டு வாழ்க!

K. R. வீடியோ

84, பருத்தித்துறை வீதி, நல்லூர் சந்தை, கல்வியங்காடு.

தமிழ் எழுத்தாளர் 'சொக்கன்' அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்!

ஹிஸன்

72, பெரியகடை, யாழ்ப்பாணம்.

மூதறிஞர் 'சொக்கன்' பல்லாண்டு வாழ்க!

விம்பிகம்பனி

மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

''சொக்கன்'' பல்லாண்டு தமிழ்ப்பணி புரிந்து வாழ வாழ்த்தும்

திருப்பதி ஸ்ரோர்ஸ்

மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

சொக்கன் அவர்களுக்கு நல்வாழ்த்துக் கூறும்

றேடியோஸ்பதி

50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சொக்கன் வாழ்க பல்லாண்டு!

ஈ. எஸ். பேரம்பலம்

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சொக்கன் அவர்களுக்கு நல்வாழ்த்துக் கூறும்

நாகேந்திரா ஸ்ரோர்ஸ்

நல்லூர் மார்க்கெட், கல்வியங்காடு.

# "இறுதிப் போராட்டத்துக்கு மக்கள் ஆதரவு வேண்டும்" - தினேஷ்

(நாவற்குழி)

"எமது இலட்சியத்திற்கான இறுதிப்போராட்டம்இனி மேல்தான் ஆரம்பமாகப் போகிறது. ஆகையால் மக்களாகிய நீங்கள் நாம் நடத்தவிருக்கும் இந்த இறுதிப் போராட்டத்தில் இன, மத வேறுபாடின்றி ஒன்றுதிரண்டு ஒத்துழையுங்கள்."

தமிழீழ விடுதலைப்புலிகளின் தென்மராட்சிப் பொறுப்பாளர் திரு. தினேஸ் மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுயில் மேற்கண்டவாறு கூறினார்,

திரு. மு. குகதாஸ் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. தினேஸ் தொடர்ந்து பேசுகையில்; "இன்றும் கூட எம் மத்தியில் இருந்து கொண்டு எமது போராட்டத்திற்கு இடையூருக சிலர் செயல்படுகிறுர்கள். அவர்களையெல்லாம் இனங்கண்டு ஆகவேண்டிய நடவடிக்கை மேற்கொள்வோம். இன்று ஏற்பட்டிருக்கும் இந்த அமைதிக்கு பொதுமக்களின் அளப்பரிய தியாகங்களும், போராளிகளின் அர்ப்பணிப்புகளுமே காரணமாகும். பொதுமக்களாகிய நீங்கள் ஒதுங்கினுல், எமது போராட்டத்தை நாம் முன்னெடுக்க முடியாமல் பின்னேக்கிச் செல்ல வேண்டியேற்படும்" என்றுர்.

இக் கருத்தரங்கில். சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் திரு. கந்தன், உடுவில் பிரதேசப் பொறுப்பாளர் திரு. ரவி ஆகியோரும் கலந்து கொண்டனர். (107)

## இராசி பலன்

சனிக்கிழமை
02 - 0 6- 1990

மேடம்: தொந்தரவு, ஏமாற்றம், தந்திரம், வசீகரம்.

இடபம்: கடினவாக்கு, தேகசுகம், செலவு, புதிய நட்பு.

மிதுனம்: தொழில் ஸ்தான மாற்றம், பெரியோர் உதவி, சுகம்.

கடகம்: ஒப்பந்தம், ஆடம்பரம், அலைச்சல், மறதி.

சிங்கம்: தூரத்துச் செய்தி, தனலாபம், செலவு.

கன்னி: மகிழ்ச்சி, புகழ், பிதாவழிச்சிந்தை, செலவு.

துலாம்: வீண் யோசனை, மனேதிடம், தூரத்துச்செய்தி, சாஸ்திரவிருப்பு.

விருச்சிகம்; நன்மதிப்பு, மனச்சோர்வு, கடன்தொல்லை சுகம்.

தனுசு: குடும்பக்கலகம், செலவு, அரசபயம், மறதி.

மகரம்: அரசியல் தர்க்கம், காரியதாமதம், சுபச்செய்தி.

கும்பம்: தெய்வ வழிபாடு, கடன் தொல்லை, மந்தப் போக்கு

மீனம்: உழைப்பு, ஆலயச் செலவு, கௌரவம்.

இ. மகாதேவா

## படகுகளும் இயந்திரங்களும் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண உணவு வர்த்தக கடற்றெழில் அமைச்சு கண்ணுடி நாலிழைப் படகுகளையும் வெளியிணைப்பு இயந்திரங்களையும் வெகுவிரைவில் வழங்கவிருக்கிறது.

கிளிநொச்சி மாவட்ட கடற்றெழில் விரிவாக்க அலுவலர் பிரிவிலுள்ள பூநகரிப்பகுதியைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட ஐந்து கடற்றெழிலாளர்களுக்கு மேற்படி படகுகளும் வெளியிணைப்பு இயந்திரங்களும்வழங்கப்படவிருக்கிறது. (153)

# 'தற்காலிக அமைதிக்காக நிரந்தர அமைதியை நாம் இழக்க முடியாது" - சந்திரன்

(வவுனியா)

"தற்பொழுது ஏற்பட்டிருக்கும் அமைதியான சூழ்நிலை ஒரு மாயையே. இப்பொழுதுள்ள சூழ்நிலை அமைதியான சூழ்நிலையாக இருக்கலாம். ஆனுல், அது சுதந்திரமான அமைதியான சூழ்நிலை இல்லை"

இவ்வாறு வன்னி மாவட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அரசியற் பொறுப்பாளர் திரு. ஆர். சந்திரன் கூறினுர்.

வவுனியா புதுக்குளம் சித்தி விநயகர் விளையாட்டுக்கழகத்தின் பன்னிரண்டாவது ஆண்டுவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:

"தமிழீழம் என்பது வவுனியா, மன்னுர், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணத்தை மட்டும் அடக்கவில்லை, திருமலை, மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தையும் உள்ளடக்கியுள்ளது. திருமலையிலும் மட்டு நகரிலும் மக்கள் மாலை மூன்று மணிக்குப் பின்னர் சுதந்திரமாக நடமாடப் பயப்படுகின்றுர்கள். இதுவா அமைதியான சூழ்நிலை? திருமலை, மட்டு வாழ் மக்களின் மனநிலையை தமிழீழ ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்,

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கோ அல்லது அமைதிக்கோ எதிரானவர்களல்லர். திம்பு, கொழும்பு, பெங்களூர் என்று பல இடங்களில் பேச்சுவார்த்தை நடாத்தியாகிவிட்டது. இன்றைய அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்றேம், ஆனுல் தமிழ் மக்களின் துரோகிகளோடு அரசு பேச்சுவார்த்தை நடாத்த முன் வந்திருப்பது எமக்கு சந்தேகத்தை அளித்திருக்கின்றது.

தமிழ் மொழிக்கு தேசிய மொழி அந்தஸ்து அளிக்கப் பட்டதாக கூறுகின்றுர்கள். ஆனுல் நடைமுறையில், கடிதங்கள், சுற்றுநிருபங்கள், அறிக்கைகள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமே வருகின்றன.

திருமலையை அண்மித்த சில கிராமங்களிலும் தமிழ்ப் பிரதேசங்களிலும் ஆமை வேகத்தில் குடியேற்றத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றன.

17 வருடங்களாக நாங்கள் நடாத்திய போராட்டத்தின் விளைவாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேங்கைகளை இழந்துவிட்டோம். அமைதி காக்கும்படை என்ற போர்வையில் வந்த ஆக்கிரமிப்பு படையினரால் ஆறுயிரம் பொதுமக்களையும் அறுநூற்றுக்கும் மேற்பட்ட போராளிகளையும் கோடிக்கணக்கான பொருட்களையும் உடமைகளையும் இழந்துவிட்டோம்- ஆனுலும், எங்கள்விடுதலை உணர்வு மழுங்கடிக்கப்படவில்லை.

நாங்கள் செல்கின்ற இடமெல்லாம் மக்கள் எம்மைப் பார்த்து "பிரச்சனை வரும் போல இருக்கிறதே" என்று கேட்கின்றுர்கள். இதன் அர்த்தம் பிரச்சனை முடிந்தபாடில்லை என்பதுதான். தமிழீழ மக்களின் சுபீட்சமே விடுதலைப் புலிகளின் நோக்கமாகும். எனவே, தற்காலிக அமைதிக்காக நிரந்தர அமைதியை நாம் இழக்கமுடியாது" என்று கூறினுர் அவர்.

வவுனியா மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. தினேஷ் கூறியதாவது; "விளையாட்டு மனிதனிடம் வெற்றி தோல்வியை சமநிலையில் ஏற்கும் மனப்பக்குவத்தை வளர்க்கின்றது. ஆரோக்கியமுள்ள மனிதனை மட்டுமல்ல சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் பிரஜையையும் விளையாட்டு உருவாக்குகின்றது" என்றுர்.

வவுனியா மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் திரு. தயாபரன் விடுதலைப்புலிகளின் கொடியையும், மாவட்டக் கொடியை உதவி அரசஅதிபர் திருமதி இமெல்டா அற்புதராசாவும் விளையாட்டுக் கழகக் கொடியை அதன் தலைவர் திரு. செ. ஆனந்தனும் ஏற்றி வைத்தனர். (84)

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தின் 42 வது கருத்தரங்கு சங்க மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது.

டாக்டர் எஸ்.ரி. புவிராசன் "வயிற்றுப் புண்ணுக்கு ஆயுர்வேத ஹோமியோபதி, அக்குபஞ்சர் சிகிச்சை" என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார். [153]

## சர்வகட்சி மாநாடு: அறிக்கை ஆராயப்பட்டது

(கொழும்பு)

சர்வகட்சி மாநாட்டின் பிரதிநிதிகள் குழு, ஜனுதிபதி திரு. ஆர். பிரேமதாசாவின் தலைமையில் ஜனுதிபதி செயலகத்தில் கூடி கடந்த இரண்டு தினங்களாக கலந்துரையாடியது.


அரசியல் யாப்பின் அடிப்படை உரிமைகள் தொடர்பான 3-வது அத்தியாயம் குறித்து ஏற்கனவே காணப்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் வரையப்பட்ட நகல் ஏற்பாடுகள் பற்றிய குழுவின் அறிக்கைஇக்ககலந்துரையாடலின்போது ஆராயப்பட்டது. (அ)


திறமைசால் சட்டமேதையாகவும், சமய சமூக சேவையாளனுகவும்
நாட்டாற்கு நற்பணியாற்றிய அருங்குணத்தோன்றல்

# உயர்திரு. எஸ். ஆர். கனகநாயகம்

## அவர்களின் முதலாண்டு நினைவில் மறக்கமுடியாத உண்மைகள்

எஸ். ஆர். ஐயாவின் 31-ம் நாள் நினைவஞ்சலிக் கூட்டம்
யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில்
நடைபெற்று அவரின் படம் திரைநீக்கம் செய்யப்பட்டபோது
வெளிப்படுத்தப்பட்ட தமிழ் பேசும் இனம் குறிப்பாக
யாழ். குடாநாட்டு மக்கள்



## மறக்க முடியாத உண்மைகள்:

1. சைவமும் தமிழும் என்று தற்பொழுது பல மேடைகளில் பேசப்பட்டு வருகிறது. ஆனுல் உண்மையாக சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு அரும்பாடுபட்டவர் திரு. Hindu Board இராசரத்தினம் அவர்கள். அவருக்கு அவர் உயிருடன் இருக்கும் பொழுது பக்கபலமாகவும் அவர் இறந்தபின் அவர் வழிநின்று சைவத்திற்கும் தமிழுக்கும் செயலாற்றியவர் திரு. எஸ். ஆர்.

2. சைவக்கோயில்கள், தர்மச்சொத்துக்கள் குறிப்பாக Hindu Board ஆதனங்கள் சேர். பி. இராமநாதன் ரஸ்ற், இந்துக்கல்லூரிகள் சபைச்சொத்துக்கள் ஆகியவற்றைப் பாதுகாத்து தகுந்த வழியில் செயல்படுத்தியவர் திரு. எஸ். ஆர்.

3. யாழ்ப்பாணத்தில் 55வருடங்களாக அட்வகேற் தொழில் பார்த்து யாழ்ப்பாணத்தில் வசித்தபொழுதும் தான் குடியிருந்த காணியைத் தவிர வேறு எவ்விதமான காணியையும் தனது பெயரிலோ தனது குடும்ப அங்கத்தவர்கள் பெயரிலோ வாங்கியது கிடையாது கல்விச் செல்வமே நிலையான செல்வம் என நினைத்து தனது பிள்ளைகளுக்கும் கல்விச் செல்வத்தைப் பெற்று வாழ வழிவகுத்தார். அதே போல் ஏறக்குறைய 18 வருடங்களாக Hindu Board Orphanage பிள்ளைகளைப் பராமரித்து கல்வி அறிவைப் பெறுவதற்கு வழிகாட்டியவராவர்.

4. தனது வாழ்க்கையில் கடந்த 55 வருடங்களாக பொதுப்பணி, அரசியல், பல வழக்குகளில் இலவசமாக ஏற்பட்டு செயல்பட்டு வந்தபொழுதும் தனக்கென மோட்டார்கார் இல்லாது தனது சொந்தப் பணத்தில் வாடகைக் கார் அமர்த்தி செயல்பட்டு வந்தவர்.

5. அரசியலில் 55 வருடங்களாக ஈடுபாடுடையவராக இருந்தும் தனக்கு மக்களை வாக்களிக்கும்படி கேட்கமாட்டேன் என்ற கொள்கையில் இருந்து விலகாது எவ்வித தேர்தலிலும் அபேட்சகராக நில்லாது அரசியலில் ஈடுபாடுடையவராக செயலாற்றி வந்தார்.

மேற்கூறிய உண்மைகளை நினைத்து அவரை நினைவு கூருவோமாக.


| மண்ணகம்: | விண்ணகம்: | திதி: |
|---|---|---|
| 11-05-1904 | 15-05-1989 | 02-06-1990 |

(சி 3919) ஓர் அன்பர்.

# 'பண்டார 'வன்னியன்' நாளை மேடையேறும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பயிலுநர் ஆசிரியர்களின் கலைவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலையாழ். இந்து மகளிர் கல்லூரி மண்ட



பத்தில் நடைபெறுகிறது.

கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இக்கலைவிழாவில் கவிதை, இசை, நடனம், நாடகங்கள் இடம்பெறுகின்றன.

கலைவிழாவில் சிறப்பு நிகழ்ச்சியாக 'இலங்கைவேந்தனின்' சுதந்திர புரட்சிமிக்க பண்டாரவன்னியனின் சரித்திர நாடகமும் இடம்பெறுகிறது. இந்நாடகத்தில் 'இலங்கை வேந்தன்' தோன்றும் ஒரு கட்டத்தை மேற்படி படத்தில் காணலாம்.

## பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக தரவு நிரைப்படுத்தல் அடிப்படை மொழிநிகழ்ச்சித் திட்டபயிற்சி சான்றிதழ் 1988 தொகுதி I முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

தகுதிச் சித்தியடைந்தவர்களின் விபரம் வருமாறு: ஏ. பி. அன்ரனி, எஸ். மயூரன், பி. பிரேம்குமார், செல்வி கே. சின்னத்துரை, செல்வி பி. சுப்பையா, வை. எல். தனராஜா, செல்வி யூ. தில்லையம்பலம, எஸ். உதயகுமரன், எஸ். உத்தம.

சித்தியடைந்தவர்களின் விபரம் வருமாறு; எஸ். ஆனந்தகுமார், எஸ். காந்தராஜா, ரி. மகேந்திரன், எஸ்.முராரே, செல்வி பி. நாகேஸ்வரன், செல்வி என். பொன்னுத்துரை, திருமதி எ. எம். ஜ. பங்கிராஸ், ஆர். ராஜசேகரன், வி. இராதாக்கிருஷ்ணன், என். செந்தில்ராஜன், என். சண்முகசுந்தரம், ஏ. சுதர்சன், செல்வி ரி. தர்மலிங்கம், எஸ். தியாகராஜா, எம். விஜயரத்தினம், பி. ரவிமன்னன், செல்வி எஸ். வேலாயுதபிள்ளை, ஈ. நித்தியானந்தராஜா. (153)

## ஆற்றல் இலக்கியத்தில்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பொறித்தவர்.

''யாழ்ப்பாண இஸ்லாமிய சகோதரர்களில் அதிகமானவர்களைத் தமது நண்பர்களாகக்கொண்டுவாழ்பவர் அவர். அவர் மேலும் பல்லாண்டு வாழவும், மேலும் பல பணிகள் புரிந்து தமிழை வளம்படுத்தவும் யாழ்ப்பாண அனைத்து முஸ்லிம்கள் சார்பிலும் வாழ்த்துகிறோம்.

''அவரது அயராத தமிழ்ப் பணிக்கும் எடுக்கப்படும் மணிவிழா, தமிழ்பேசும் மக்களின் நன்றி விழாவாக அமையட்டும். வித்துவான் சொக்கன் M. A. அவர்கள், கலாநிதி சொக்கன் ஆகவும், அவர் எல்லா நலமும் பெற்றுப் பல்லாண்டு தமிழ்ப் பணி புரியவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.''

## வாழ்ந்து காட்டும்

(ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வித்துறையில் பெருஞ்சொத்தாகத் திகழ்பவர். ஆசிரியராக, அதிபராக, சேவைக்காலக் கல்வி ஆலோசகராக, பாடநூல் எழுத்தாளராக, பாடதிட்ட வரைவு ஆலோசகராக, விரிவுரையாளராக, யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தானுகப் பல்வேறு துறைகளில் கல்வி வளர்ச்சிக்கு அவர் அளப்பரிய பணியாற்றியுள்ளார்.

''சிறுகதை ஆசிரியராக, நாவல் எழுத்தாளராக, கவிஞராக, நடிகராக, நாடக ஆசிரியராக, நாடக நெறியாளராக நாடக ஆய்வாளராக, விமர்சகராக, பேச்சாளராக, கட்டுரையாளராக மொழிபெயர்ப்பாளராகப் பல்துறைகளிலும் ஆற்றலாளராக விளங்குபவர் அவர். சுருங்கச் சொன்னுல் நடமாடும் பல்கலைக்கூடமாக விளங்குகிறுர் திரு. சொக்கன்.

''மணி விழாக்காணும் சொக்கன் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்கும் சைவத்துக்கும், கலவிக்கும் தொண்டு ஆற்ற இறையருள கிடைக்கமனமாரவேண்டுகிறேன்.''

## சிந்து மாகாணத்தில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

## வளைகுடா விஜயம் ஒத்திவைப்பு

தொடர்ச்சியாக வன்முறைகள் நடைபெறுவதைத்தொடர்ந்து காஷ்மீர் விவகாரம் தொடர்பாக ஆதரவு தேடும் நோக்குடன் பிரதமர் பெனுஸிர் வளைகுடா நாடுகளுக்கு மேற்கொள்ள விருந்த விஜயம் ஒத்திப்போடப்பட்டுள்ளது. (து)

## மணிவிழா

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தோடு ஆழமான கருத்துக்களை வாரிவழங்கியுள்ளார். தமிழ் இலக்கியத்தில் மட்டுமல்ல, ஆங்கில இலக்கியத்திலும் ஈடுபாடுடையவர். கவிஞராகிய சொக்கன் கவிகள் ஆக்குவதில் வல்லோன். கவிஞர் வானில் ஒரு துருவ நட்சத்திரமாகத் திகழுகிறுர். 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற ரீதியில் சொக்கன் ஐயா சிறந்த மாணவ பரம்பரையை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

அன்ரெுரு நாள் சொக்கன் ஐயா அவர்கள் என் பிறந்த மனையாகிய யாழ். நகரில் சுண்டுக்குளிப் பகுதியில் கோவில் வீதியிலுள்ள 'துரையப்பா இல்லத்திற்கு' ஒரு மாலை வேளை வந்தார். அவ்வேளை புனித சின்னப்பர்ஆலயபொன் விழா நினைவு மலர் உருவாக்குவதற்கு திட்டம் தீட்டிக் கொண்டிருந்தேன். அவ்வேளை புனித சின்னப்பரைப் பற்றி ஒரு கவி இயற்றித் தரும்படி சொக்கன் ஐயாவிடம் அன்பின் வேண்டுகோளை விடுத்தேன். சில தினங்களுக்குள் திருநூலில் புனித சின்னப்பரின் சரிதையை நன்ருகப் படித்து ''வழிகாட்டும் சின்னப்பர் வாழி! வாழி!! என்ற தலைப்பில் அதில் இருவரிகள் (பொன்விழா மலர் பக். 15 18-07-82)

''அன்பில்லார் சத்தமிடுந்
தாளம் போல்வார்
அன்புமிகப் பொறுமை
கொளும் பரிவு
காட்டும்...''

எனக் கவி பாடித் தந்தார்.

சொக்கன் ஐயா அவர்கள் கொத்தணி அதிபர் என்ற அரச பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். ஆனுல் அவரது கல்விப்பணி ஓய்வுபெறுது. அவரது குருகுலம் இனி ஒரு நாளின் இருபத்துநான்கு மணி நேரமும் கல்விச் சேவை ஆற்றும் என்பது என் போன்ற மாணவரின் உறுதியான நம்பிக்கை. இப்பெரியார் பல்லாண்டு வாழ்ந்து பணி தொடர அமலனின் அருளும் ஆரோக்கியமும் கிடைக்க நன்றிப்பெருக்குடன் வாழ்த்துகிறோம்.

# "பேச்சுவார்த்தைமூலம் 40 வருடம் கிடைக்காத உரிமை இன்று கிடைக்குமென நம்பிக்கையில்லை"

— பாப்பா

(நாவற்குழி)

கடந்த 40 வருடங்களாக பேச்சு வார்த்தை மூலம் கிடைக்காத எமது உரிமை தற்போது நடக்கும் பேச்சுவார்த்தை மூலம் எமக்கு கிடைக்கும் என்பதில் நாம் பிக்கையில்லை. ஆனுல் போராட்டத்தைப் பரிசீலிக்கும இலங்கை அரசின் செயற்பாட்டைப் பொறுத்தே எமது இராணுவ அரசியல் போராட்டத்தின் வடிவங்கள் மாறுதலடையும்.''

இவ்வாறு தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா சாவகச்சேரி சந்தை முன்றலில் நடைபெற்ற அமரர் காணிக்கை நினைவுதினக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

டாக்டர் பீ எட்வேட் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பாப்பா தொடர்ந்து பேசுகையில்கூறியதாவது; நாம் வெளிப்படையாக இராணுவத்துடன் மோதியபோதும் எமக்குஉதவி செய்யப்பலர் முன்வந்தனர். போராட்டம் நலிவடைந்து இந்திய இராணுவத்துடன் மோதிய காலத்தில் எமக்கு உதவிசெய்ய மக்கள் தயங்கினுர்கள். ஆனுல் காணிக்கை அண்ணன் இந்தக் காலகட்டத்தில்தான் எமக்கு உணவளித்து உறங்க இடமளித்து கண்ணை இமை காப்பதுபோல எம்மைக் காப்பாற்றினுர். எம்மைக் காப்பாற்றிய ஒரே காரணத்திற்காகவே அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இனிவரும் காலகட்டங்களிலே போராட்ட காலத்தில் துரோகிகள் இருந்தால் அவர்களை அழித்தே தீருவோம்.

காணிக்கையின் நினைவாக மக்களினுல் உதைபந்தாட்டப் போட்டிகள் திரு. பி. ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது, 19வயதிற்கு மேற்பட்டோர் போட்டியில் 1ம் இடத்தை தென்மராட்சிவிளையாட்டுக்கழகமும், 2ம் இடத்தை புனித லிகோரியார் இல்லமும், 19 வயதிற்குட்பட்டோருக்கான போட்டியில் 1ம் இடத்தை புனித லிகோரியார் விளையாட்டுக் கழகமும், 2ம் இடத்தை திருவள்ளுவர் விளையாட்டுக்கழகமும் பெற்றுக்கொண்டன, வெற்றிக் கேடயத்தை திரு. பொ. விஜயேந்தி அன்பளிப்பு செய்தார். ஏனைய பரிசுப்பொருட்களை தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரும். திருவள்ளுவர் விளையாட்டுக் கழகமும் அன்பளிப்பு செய்தனர். (107)

## மெய்வல்லுநர் போட்டி

[தென்மராட்சி]

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் வித்தியாலய அதிபர் திரு. கே. தம்பு தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரெட் பிரதம விருந்தினராகவும் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. சுந்தரம்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். திருமதி ஜூலியற் அன்ரன் அல்பிரெட் பரிசில் வழங்குவார். (81)

# யாழ். மாவட்டப் போட்டி: வலி. வடக்கு முதலிடம்

(காங்கேசன்துறை)

யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையேநடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு முதலிடத்தைப் பெற்றதுடன் பல புதிய சாதனைகளும் நிலைநாட்டப்பட்டன.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி விளையாட்டரங்கில் இடம்பெற்ற இப்போட்டியில் வலி- வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு 100 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து கலந்துகொண்ட தில்லானு சுமங்கலி சபாரத்தினம் என்னும்போட்டியாளர் நீளம்பாய்தலில் 16அடி 4அங்குலம் பாய்ந்து முந்திய சாதனை அளவான 15 அடி $11\frac{1}{2}$ அங்குலம் என்பதை முறியடித்தார்.

அவர் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் 13.5 செக்கனில் ஓடி முடித்து, முந்திய சாதனை அளவான 13 8 செக்கன் என்பதை முறியடித்தார்.

மற்ரெுரு போட்டியாளரான ரி.வளர்மதி குண்டெறிதல் போட்டியில் முந்திய சாதனை அளவான 25 அடி $1\frac{1}{2}$ அங்குலத்தை விடுத்து 25 அடி 10 அங்குலத்திற்கு குண்டெறிந்து சாதனை நிலைநாட்டினுர்.

அஞ்சலோட்டத்தில் (4X400 பெண்கள்) 5 நிமிடம் 4. 5 செக்கனுக முந்திய சாதனை அளவு இருந்தது, ஆனுல் 4 நிமிடம் 45 செக்கனில் ஓடிமுடித்து புதிய சாதனை நிலைநாட்டப்பட்டது. (86)

# பெண்கள் சமூக பொருளாதாரம் தொடர்பான கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

மகளிர் அபிவிருத்தி நிலையம் நாளை 3-ம் திகதி கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் 'மனிதவள மேம்பாடும் பெண்கள் பங்கும்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கை ஒழுங்குசெய்து நடாத்தவுள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிலையம் 'ஒக்ஸ்பாம்' நிறுவனத்திற்காக கிளிநொச்சிமாவட்டத்திலுள்ள பாரதிபுரம், பூநகரி போன்ற இடங்களில் மேற்கொண்ட பெண்கள் சமூக, பொருளாதார முன்னேற்றம் சம்பந்தமான ஆய்வின் அடிப்படையில் சில செயற்திட்டங்களை இனம் காணுவதும் நடைமுறைப்படுத்துவதுமே இக் கருத்தரங்கின் நோக்கமாகும்.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பதவியை உள்ளடக்கிய பகுதிகளிலிருந்து இளம் பெண்களும், இளைஞர்களும் கலந்து கொள்கின்றனர். இக் கருத்தரங்கை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய கொத்தணி அதிபர் நா. சோதிநாதன் வைபவரீதியாக ஆரம்பித்து வைப்பார்.

கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் செ. அமிர்தலிங்கம் கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பவானி சிறீஸ்கந்தராசா, செஞ்சிலுவைச்சங்கத் தலைவர் வண. திரு. எஸ். ஜெயநேசன், கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகஸ்தர் செல்வி நா. இந்துமதி, பாரதிபுரம் கிராமசேவை உத்தியோகஸ்தர் திரு. பொ. யோகேந்திரன், மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குநர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். இக்கருத்தரங்கு 'ப்ரெடரிக் ஈபெட்' மன்றத்தின் ஆதரவில் இடம்பெறுகிறது.

## விளையாட்டுப் போட்டி

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் கொத்தணி அதிபர் பிரிவில் உள்ள தலைமைப்பாடசாலையான இந்து மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்லவிளையாட்டு போட்டி கொத்தணி அதிபர் ம. பத்மநாதன் தலைமையில் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. (83)

'ஈழநாடு'
வார மலர்
03- 06 - 1990

★ தென்பகுதி தமிழ் மக்கள்
★ உலக உதைபந் தாட்டப்போட்டி
★ தமிழிசை
★ ஈழத்து புதுக்கவிதை
★ உள்ளத்தின் உறுதி (சிறுகதை)
★ மறுமலர்ச்சி (கவிதை)
★ முருங்கையின் மகத்துவம்
★ முதியோர் உலகம்
★ மங்கையர் மஞ்சரி
★ மாணவர் மன்றம்
★ வைத்திய கலாநிதி பதிலளிக்கிறுர்
★ நிர்வாகத்தில் நிகழ்பவை
★ யாழ். மாவட்ட கிராம சேவையாளர் பிரிவு

மற்றும்
வழக்கமான அம்சங்கள்
விலை ரூபா 4/-

ஹரன்
சினிமா
தினசரி 4-00, 7-00. 9-30
சனி, ஞாயிறு நாட்களில்
10-30, 2-30 6-30, 9-30
விஜயகாந், ரேகா செந்தில் நடித்த
சொல்வதெல்லாம் உண்மை
(ஏ 783)

# வட-கிழக்கில் இந்தியப்படையினுல் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து மதிப்பீட்டு வேலைகள் ஆரம்பம்

(அக்கரைப்பற்று)

இந்தியப் படை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் முப்பது மாதங்கள் இருந்த காலப் பகுதியில் அரச, கூட்டுத்தாபன, தனியார் கட்டிடங்களுக்கு ஏற்பட்ட சேதங்கள், அவற்றைப் புனரமைப்புச்செய்வதற்குத் தேவைப்படும் செலவின் விபரம், இதேபோன்று தனியார் வீடுகள், அவர்களின் உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள்பற்றிய ஒரு மதிப்பீடு மேற்கொள்ளப்படவிருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் திரு. ஏ. கே. பத்மநாதன் உதவி அரசாங்க அதிபர் மட்டத்திலிருந்து இந்த மதிப்பீட்டு வேலைகளை மேற்கொண்டுவருகிறுர்.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு அரசாங்க அதிபர்களுக்கும் இது தொடர்பான ஒரு பணிப்புரை செயலாளரினுல் விடுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்க அதிபர் தங்கள் மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர்கள்மூலம் இந்த மதிப்பீட்டு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த விபரங்கள் இம்மாத இறுதிக்குள் தயாரிக்கப்பட்டு ஜூன் மாதம் 9ம், 10ம் திகதிகளில் மட்டக்களப்புக் கச்சேரியில் நடைபெறவிருக்கும் வடக்கு-கிழக்கு மாகாணசபையின் புனர்வாழ்வு சம்பந்தமான மகாநாட்டின்போது இது ஒரு முக்கிய அம்சமாகப் பரிசீலனை செய்யப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்திய அமைதிப்படை முப்பது மாதகாலம் இந்தப் பிரதேசத்தில் இருந்த போது 17 கோடி 50 லட்சம் அமெரிக்க டொலர்கள் செலவாகியுள்ளதாக இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்தின் தகவலிலிருந்து தெரியவருகிறது. இந்திய அமைதிப் படையினர் இருந்த காலத்தில் அம்பாறை. மட்டக்களப்பு மாவட்டங்களிலேயே தனியார் கட்டிடங்களுக்கும், தனியார் சொத்துக்களுக்கும் அதிக சேதம் ஏற்பட்டுள்ளதென்று இரு மாவட்டங்களிலும் தயாரிக்கப்பட்டுவரும் அறிக்கைகளிலிருந்து தெரியவருகிறது. (142)

## யாருடையது?

நவாலியைச் சேர்ந்த ஆறுமுகம் சுப்பிரமணியத்தின் ஆளடையாள அட்டையை [232840200V] வைத்தீஸ்வரா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் பா. குகராஜசிங்கம் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த சான்றேடு அலுவலகத்திற்கு வந்து பெற்றுக்கொள்ளவும்.

## பரந்தன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளனர். ஜூன் மாதமளவில் இயந்திரங்களின் திருத்த வேலைகள் முடிவடைந்து விடுமென அவர் மேலும் தெரிவித்தார்.

வன்செயலை அடுத்து பல வருட காலமாக இயங்காதிருந்த பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத்தை மீண்டும் இயங்கவைக்க விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணித்தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராசா துரித நடவடிக்கைகளை ஜனதிபதியிடம் தொடர்பு கொண்டு மேற்கொண்டதையடுத்தே இத் தொழிற்சாலை இயங்கவிருப்பது குறிப்பிடத்தக்கது. (83)

## போஷாக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கான கருத்தரங்கு, இடம்பெயரும் போஷாக்குக் கல்வி போன்ற கல்விகள் நடத்தப்படவிருக்கின்றன.

போஷாக்குத் தொடர்பான கல்வி யாழ். மாவட்டத்தில் முன்பு திட்ட அமுலாக்கல் அமைச்சினுல் நடத்தப்பட்டு வந்தது. கடந்த சில வருடங்களாக அது வட பகுதியில் நடைமுறைப் படுத்தப்படாமல் இருந்தது. (153)

## தனிநாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னைப்போன்ற பலமகளிர் இந்தியாவுக்கு எதிராகப் போர் செய்தார்கள்.

எமது சமுதாயத்தில் இடம் பெறும் சீதனம் கொடுக்கும் முறை ஒழிக்கப்படவேண்டும். எமது இயக்கத்தில் திருமணம் செய்யக்கூடாதென்று சொல்லவில்லை. ஒழுக்கக் கட்டுப்பாட்டுக்கமைய செய்யலாம். அதுவும் இயக்கத்தில் சேர்ந்து ஐந்து வருடங்களின் பின்பு தான் திருமணம் செய்யமுடியும்.

எமது பெற்றேர் இயக்கத்தில் சேர்வதற்கு ஆதரவு தருகிறுர்கள். ஆனுல் போராட்ட காலத்தில் பிள்ளைகளை இழக்கலாம் என்ற பயம் அவர்களுக்கு உண்டு. என்ருலும் ஒரு வீட்டிலிருந்து இரண்டு மூன்றுபேர் எமது இயக்கத்தில் சேர்ந்திருக்கிறுர்கள். (152)

# வடக்கு கிழக்கில்உருவாகி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களைத் தெரிவு செய்வதற்கு வழியேற்படுத்தப்படும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உயர்மட்ட பிரதிநிதிகளுக்கும், அரசு தரப்பு பிரதிநிதிகளுக்குமிடையில் இடம் பெற்ற மூன்றுமணிநேர சுமுகமான பேச்சுவார்த்தையின் போது ஜனதிபதி திரு. ஆர். பிரேமதாசா மேற்கண்ட உறுதிமொழிகளை வழங்கியுள்ளார்.

வடக்கு – கிழக்கு மாகாண சபை உடனடியாக கலைக்கப்பட்டு மீண்டும் தேர்தல் நடாத்த வேண்டும் என்றும் அரசியல் யாப்பின் 6 வது திருத்த சட்டத்தை அரசாங்கம் நீக்க வேண்டும் என்றும், விடுதலைப்புலிகள் இயக்க பிரதிநிதிகள் பேச்சுவார்த்தையின் போது வலியுறுத்தினர்.

இந்தப்பேச்சுவார்த்தையின் போது இருதரப்பினரும், பல்வேறுபட்ட பிரச்சனைகள் குறித்து மனம்திறந்து அபிப்பிராயங்களைத்தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகள் இயக்கத் தூதுக்குழுவினர் பேச்சுவார்த்தையின் தமது கருத்துக்களை வெளியிடுகையில்:

இந்திய அமைதிப்படை வெளியேறிய பின்னர் கடந்த மூன்று மாதகாலமாக வடக்கு கிழக்கு பகுதிகளில் நிலைமை பெருமளவுக்கு சீரடைந்துள்ளது. சிவில் நிர்வாகம் சீராக நடைபெறுகின்றது. சகல துறைகளிலும் பொதுமக்களின் நடடிக்கைகள் சகஜ நிலைமைக்கு திரும்பியுள்ளது. என தெரிவித்தது.

வடக்கு கிழக்கு மாகாண சபை செயலிழந்து இருப்பதனுல், அங்கு அரதியல் சூன்ய நிலை உருவாகியுள்ளது இதன் விளைவாக அப்பகுதி மக்கள் பல்வேறு பிரச்சனைகளை எதிர் நோக்கி வருகிறுர்கள்.

மாகாணசபை உடனடியாகக் கலைக்கப்பட்டு மீண்டும் தேர்தலைநடாத்தநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வடக்கு-கிழக்கு பகுதிகளில் சீரான அரசியல் நிர்வாகம் இயங்க இது வழிகோலும்.

நாட்டை மேலும் பிளவுபடுத்தக்கூடிய அரசியல் யாப்பின் 6வது திருத்தச்சட்டத்தை அரசாங்கம் நீக்கவேண்டுமென்றும் மேலும் வலியுறுத்தப்பட்டது.

ஜனதிபதியுடன் நீதியமைச்சரும், வடக்குகிழக்குமாகாண சமாதானக்குழுவின் தலைவருமான ஜனப் ஏ. ஸி. எஸ். ஹமீத் கலந்துகொண்டார்

விடுதலைப்புலிகன்ன் சார்பில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராசா (மாத்தயா) செயலாளர் திரு யோகரட்ணம் யோகி, அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கமும், மகளிர் முன்னணித் தலைவி செல்வி ஜெயா ஆகியோர் கலந்து கொண்டனர், (அ)

## யாழ். தேர்தல் மாவட்டத்தின் 1989-ம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் 5 லட்சத்து 96,382 வாக்காளர் பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். தேர்தல் மாவட்டத்தின் 1989ம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்ட வாக்காளர் இடாப்பின் மொத்த வாக்காளர் தொகை 5 லட்சத்து 96 ஆயிரத்து 382 ஆகும்.

நேற்றுமுன்தினம் யாழ். தேர்தல் மாவட்ட உதவிப் பதிவு அலுவலர் திரு. எம். சீ. அருந்தவச்செல்வம் மேற்படி திருத்தியமைக்கப்பட்ட வாக்காளர் இடாப்பை அத்தாட்சிப்படுத்திஞர்.

யாழ். தேர்தல் மாவட்டத்தினுள் கிளிநொச்சி நிருவாக மாவட்டமும் அடங்குகிறது.

முன்பு தேர்தற் தொகுதிகள் என்று அழைக்கப்பட்ட தேர்தற் பிரிவுகள் இன்று வாக்கெடுப்புப் பிரிவுகளென்று அழைக்கப்படுகிறது.

யாழ் தேர்தல் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவிலுமுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை வருமாறு:

வாக்கெடுப்புப் பிரிவும், வாக்காளர் தொகையும்:–

| | |
|---|---|
| ஊர்காவற்றுறை | 49508, |
| வட்டுக்கோட்டை | 58951, |
| காங்கேசன்துறை | 60,421 |
| மானிப்பாய் | 58,383 |
| கோப்பாய் | 56,500 |
| உடுப்பிட்டி | 52,158 |
| பருத்தித்துறை | 40,337 |
| சாவகச்சேரி | 51,720 |
| நல்லூர் | 62,381 |
| யாழ்ப்பாணம் | 50,027 |
| கிளிநொச்சி | 55,996 |

மொத்த வாக்காளர் தொகை 596382. (153)

## மினிபஸ் விபத்தில் 10 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுப்பகல் இரண்டுமணியளவில் கீரிமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சுமார் 35 பிரயாணிகளுடன் வந்த மினிபஸ் திடீரென வீதியருகிலிருந்த மதகுடனும் பின்மரத்துடனும் மோதுண்டு விபத்திற்குள்ளானதில் சாரதி உட்பட 10 பேருக்குமேல் படுகாயமடைந்தனர் மினிபஸ் பலத்த சேதமடைந்தது.

## யாழ். ஆஸ்பத்திரி ஊழியருக்கு நிவாரணம் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனை வைத்தியசாலையில் கடந்த 1987-ம் ஆண்டு அக்டோபர் 21-ம் திகதி இடம்பெற்ற இந்திய படையினரின் தாக்குதல் சம்பவத்தின்போது படுகாயமடைந்த வைத்தியசாலை ஊழியர்களுக்கு எந்தவொரு நிவாரணமும் இதுவரை வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிவாரணம் தொடர்பாக சம்பந்தப்பட்ட ஊழியர்கள் இதுவரைகாலமும் மேலிடத்துடன் ஆறுதடவைகளும், வைத்தியசாலை நிர்வாகத்துடன் பலதடவைகளும் தொடர்பு கொண்டும் எந்தவொருபதிலும் கிடைக்காததையிட்டு அதிருப்தி அடைந்துள்ளனர். (56)

## வட-கிழக்கில் வன்செயலினுல் உயிரிழந்தோரின் குடும்ப அங்கத்தவர்க்கு அரசாங்க் வேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு உட்பட நாடு முழுவதும் கடந்தகால வன்செயல் சம்பவங்களின் போது உயிரிழந்தோரின் குடும்ப அங்கத்தவர்களில் ஒருவருக்கு அரசாங்க வேலைவாய்ப்பு வழங்கவிருப்பதாகத் தெரியவருகிறது.

இதனைத் தொடர்ந்து கடந்த கால வன்செயல் சம்பவங்களின்போது உயிரிழந்தோரின் விபரங்கள், காணுமற்போனவர்களின் விபரங்கள், கடுங்காயமடைந்தவர்களின் விபரங்கள் கிராமசேவையாளர் ஊடாக உதவி அரசாங்க அதிபர் பிரிவுமட்டத்தில் உண்மையான தகவல்களைத் திரட்ட புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

யாழ். மாவட்டத்திலும் பதினுன்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுமுள்ள கிராம சேவையாளர் ஊடாக மேற்படி விடயங்கள் அடங்கிய தகவல்கள் திரட்டப்படவுள்ளன. (153)

## பிறப்பு இறப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி

ஒரு போட்டோ ஸ்ரற் இயந்திரத்தைப் பாவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

ஏற்கனவே மேற்படி பகுதியிலிருந்த பழுதடைந்த போட்டோஸ்ரற் பிரதி எடுக்கும் இயந்திரமொன்று கடந்த மாதம் 18ம் திகதி கொழும்புக்கு திருத்த வேலைக்காகக் கொண்டு செல்லப்பட்டது. அடுத்த வாரம் இந்த இயந்திரமும் மேற்படி பகுதிக்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேலதிக பதிவாளர் அலுவலகத்தில் தேங்கிக் கிடக்கும் ஆயிரக்கணக்கான பிறப்பு, இறப்பு, விவாக விண்ணப்பங்களின் சான்றிதழ்கள் வழங்கும் வேலைகளை விரைவாகச் செய்வதற்கு போட்டோஸ்ரற் பிரதி எடுக்கும் இயந்திரங்கள் மூன்றும் உதவுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (153)

## தியாகி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புக் குழுவினரால் ஏற்படுத்தப்பட்டுள்ள கொடித்தின வாரத்தின்போது பொது மக்கள் தங்களால் இயன்ற ஆதரவை வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## இந்திய படை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பிரதேச கௌரவம்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றும் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: ''ஒரு நாடு உதவும் படி மற்றுமொருநேசநாட்டிடம் கோரிய பல சந்தர்ப்பங்கள் உள்ளன. அவ்வாறு இராணுவ உதவி கோரியதில் புதுமை இல்லை'' என்று குறிப்பிட்டார். (152)

## யாழ். போதனு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுகோளுக்கிணங்க யாழ். போதனு வைத்தியசாலைப் பணிப்பாளர், நிர்வாகப்பணிப்பாளர், தாதிய மேற்பார்வையாள்ர், அடங்கிய 9 பேர்கொண்டகுழுவொன்று சுகாதார அமைச்சின் மேலதிகாரிகளால் கடந்தவாரம் நடாத்தப்பட்ட ஆய்வரங்கில் பங்குகொண்டு யாழ்.போதனு வைத்தியசாலையின் திட்டத்தைக் கையளித்துள்ளது.

## புலிகள்-அரசு

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

கலந்துகொண்ட இப்பேச்சுவார்த்தை நிகழ்வுகளை ஒளிபரப்பிய 'ரூபவாஹினி', செல்வி ஜெயாவுக்கு ஒளிபரப்பில் முக்கியத்துவம் அளித்தது குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு ஆனி மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.